06.02.2024

அ.வ.எண். 937-2017

பி.வாசா.1 - பாலசுப்பிரமணி

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கே.பி.ஆர். டெவலப்பர்ஸ் லிமிடெட் கம்பெனியில் ஆவண அலுவலராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். என் மீது தனிப்பட்ட முறையிலும் ஆவண அலுவலர் என்பதன் அடிப்படையிலும் என்மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை. வழக்குரை எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். கே.பி.ஆர் காட்டன் மில்ஸ் என்ற நிறுவனம் மற்றும் அவர்கள் மீது தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கே.பி.ஆர் டெவலப்பர்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் தான் இந்த வழக்கு நடத்த எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளது. 1ம் பிரதிவாதி நிறுவனம் எனக்கு அதிகாரம் அளிக்கவில்லை என்றால் சரிதான், தற்பொழுது அந்த நிறுவனம் செயல்பாட்டில் இல்லை. 1ம் பிரதிவாதி நிறுவனத்தை கே.பி.ஆர் மில் டெவலப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்துடன் இணைத்து விட்டோம்.

நான்கு நிறுவனமாக இருந்ததை ஒரே நிறுவனமாக மாற்றி விட்டோம். இந்த சங்கதியை என்னுடைய எதிர் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ஒரே நிறுவனமாக இணைத்ததற்குண்டான ஆவணத்தையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கில் தரப்பினராக இல்லாத நான், நான் பிரதிவாதி நிறுவனத்துக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் அனுமதி கோரி மனுத்தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நீதிமன்ற அனுமதி இல்லாமல் நான் தரும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றும், அதை அனுமதிக்க கூடாது என்றால் சரியல்ல. கே.பி.ஆர் காட்டன் மில்ஸ் நிறுவனம் என்னை இந்த வழக்கை நடத்த சிறப்பு அதிகாரம் வழங்கி முகவராக நியமனம் செய்யவில்லை.

வாதி வழக்கு தாக்கல் செய்யும்போது ஒரு கிருஷ்ணன் என்பவர் பிரதிவாதி நிறுவனத்திற்கு பொது அதிகார முகவர் என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளனர் என்றால் ஆமாம். கண்ணன், பொது அதிகார முகவராக இருந்தார் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் அதில் பிரச்சனை எதுவும் இல்லை. மேற்படி கிருஷ்ணன் அல்லது

வழக்கு தரப்பினர்கள் சாட்சியம் அளிக்க முடியும் என்றும், என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் சரியல்ல. நான் 2007 ம் ஆண்டு கே.பி.ஆர் நிறுவனத்தின் ஆவண அலுவலராக பணியில் சேர்ந்தேன். அதற்கு முன்பு பிரதிவாதிகள் சொத்து வாங்கியது பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். வழக்கு சொத்துக்களை எனக்கு நேரடியாக எனக்கு தெரியும், நான் அதை பார்த்துள்ளேன்.

வாதிகள் 194 நம்பர் காலையில் 4.48 1/2 ஏக்கர் கிரயம் பெற்றதாக இந்த வழக்கில் சொல்லியுள்ளனர். அதில் ஒரு பகுதியான 64 செண்ட்டை நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். தென்வடல் தடம் உள்ளதாகவும், அதை நாங்கள் அடைத்து விட்டதாகவும் சொல்லி பரிகாரம் கேட்டுள்ளனர். இன்னொரு பரிகாரம் என்னவென்று எனக்கு தெரியாது. வாதிகளுடைய 4.48 சொத்துக்கு வடபுறம், மேல்புறம், கிழபுறம் எங்களது நிறுவனத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. 24.08.1977 ல் வா.சா.ஆ.1 ன் கீழ் வாதிகள் கிரயம் பெற்று அனுபவம் செய்து வரும் சொத்தை பொருத்து எனக்கு ஆட்சேபணை இல்லை, என்ன விஸ்தீரணம் என்று எனக்கு தெரியாது.

அவர்களது ஆவணத்தின் அடிப்படையில் அவர்கள் அனுபவம் செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல. 194 நம்பர் காலையில் நாங்கள் மொத்தம் எவ்வளவு கிரயம் பெற்றோம் என்றால் சரியாக தெரியவில்லை. வாதிகளுடைய தாவா சொத்தை ஒட்டி வடபுறம், 194/4 காலையில் உள்ளது. 194/4 நம்பர் காலை மொத்தம் 60 ஏர்ஸ் விஸ்தீரணம் உள்ளது. நடராஜன், குமாரசாமி வகையறாவிடம் இருந்து நாங்கள் அதை கிரயம் பெற்றோம். நாங்கள் 60 ஏர்ஸ் விஸ்தீரணம் கிரயம் பெற்றதாக சொல்வதற்கான மூலப்பத்திரம் தாக்கல் செய்யவில்லை. எனது கிரய முன்னவர்களுக்கு 194 நம்பர் காலையில் 60 ஏர்ஸ் பாத்தியப்பட்டது என்று நான் சொல்வது தவறானது என்றால் சரியல்ல. மேற்படி 60 ஏர்ஸ் நிலத்தை பி.வா.சா.ஆ.3 ன் மூலம் கிரயம் பெற்றுள்ளோம்.

பி.வா.சா.ஆ.3 கிரய முன்னோர்களான மொத்தம் 9 நபர்கள் வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி 9 நபர்களும் தனித்னி பத்திரத்தின் கீழ் அவர்களுக்கு

சொத்து பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்கள். அவர்கள் அனைவரும் தனித்தனி குடும்பங்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 9 நபர்களுக்கும் தனித்தனியாக வெவ்வெறு பத்திரங்களில் அடிப்படையில் சொத்து பாத்தியப்பட்ட போதும் ஒரே பத்திரத்தின் கீழ் கிரயம் பெற அவசியம் என்ன என்றும், அனைத்து சொத்துக்களும் அருகருகே உள்ளதால் ஒன்றாகவே கிரயம் பெற்றுவிட்டோம். மேற்படி சொத்துக்களுக்கு நான்கு எல்லை குறிப்பிட்டு கிரயம் வாங்கவில்லை, உட்பிரிவு ஆகிவிட்டதால் உட்பிரிவு குறிப்பிட்டு கிரயம் வாங்கிவிட்டோம்.

மூலப்பத்திரங்களை பார்த்து தெரிந்துகொண்டதால் கிரயம் பெற்றோம். மூலப்பத்திரங்களில் உட்பிரிவு எண் குறிப்பிட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. மூலப்பத்திரங்களின் அடிப்படையில் அளந்து பார்த்துதான் கிரயம் பெற்றோம், அதன் அளவீடு செய்ததற்கான வரைபடம் என்னிடம் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அளந்து பார்த்து சொத்துக்களை கிரயம் வாங்கியதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பத்திரங்கள் தான் ஒரு சொத்தின் உரிமையை நிர்ணயிக்க கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் உள்ள சொத்தை கிரயம் வாங்கும்போது வாதிகளிடம் அந்த சொத்துக்களை கிரயம் கேட்டோமா என்றால் இல்லை.

எங்களது சொத்திற்கு எந்த தேதியில், கம்பிவேலி அமைக்கப்பட்டது என்றால் 2006 ம் ஆண்டு அமைக்கப்பட்டது. பொதுவாக சர்வேயரிடம் பணம் கட்டி பத்திரத்தின் அடிப்படையில் அளந்து தான் கம்பிவேலி அமைப்பார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் கம்பிவேலி அமைக்கும்பொழுது வாதிகளும் அங்கிருந்தார்கள் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை. அவ்வாறெனில் நாங்கள் வேலி போடும்பொழுது வாதிகள் தகராறு செய்ததாக நான் முதன்மை சாட்சிய வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளது தவறானது என்றால் ஆமாம். வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் மூலம் அளந்து பார்த்தது எனக்கு தெரியாது. என்னுடைய வழக்கறிஞருக்கு முறையான அறிவிப்பு கொடுக்கப்பட்டது எனக்கு தெரியாது. என்னுடைய வழக்கறிஞருக்கு நீதிமன்ற ஆணையர் நியமன மனுவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக எழுதிக்கொடுத்து அவர் வரவில்லை என்றால் எனக்கு தெரியாது.

நீதிமன்ற ஆணையர் நியமன மனுவின் உத்தரவை எதிர்த்து சீராய்வு மனு தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கைக்கு ஆட்சேபணை தாக்கல் செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் வாதிகளின் 64 செண்ட் நிலத்தை நாங்கள் ஆக்கிரமித்து வேலி அமைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. வாதிகளின் பூமியில் அவர்களது பாகத்தில் தென்னை மரங்கள் உள்ளது. அவர்களது பூமியில் மஞ்சள், வாழை, கரும்பு வருடா வருடம் விவசாயம் செய்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவர்களுக்கு பாத்தியப்பட்ட வேறு பூமி க.ச.எண்.219 ல் இருந்து நிலத்திற்கிடையில் அரசாங்க அனுமதி பெற்று தாவா சொத்தில் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரியாது.

நாங்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள 64 செண்ட் பூமி வாதி அயிட்டம் 2 சொத்தில் இருந்து 1.5 அடி உயரம் இருக்கும் என்றால் சரிதான். அது மானாவாரி பூமி என்றால் சரியல்ல.

மேலும் குறுக்குளவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/பாலசுப்பிரமணி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected

N RENUGA
Digitally signed by N RENUGA
Date: 2024.02.07 09:46:02 +0530

District Munsif
Sulur